**நிலைபேறு சக்தித் துறை ஆதரவுச் செயற்திட்டம் - 2013**

---

நிலைபேறு சக்தித் துறை ஆதரவுச் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஆ.அ.வ) இலங்கை மின்சார சபைக்கும் (இ.மி.ச) மற்றும் நிலைபேறு சக்தி அதிகாரசபைக்கும் (எஸ்ஈஏ) இடையில் 2011 யூன் 20 இல் கைச்சாத்திடப்பட்ட 2733 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) மற்றும் 2734 எஸ்ஆர்ஐ எஸ்எவ் ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.05(ஏ) மற்றும் 4.03(ஏ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின் தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

நிலைபேறு சக்தித் துறை ஆதரவுச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் படி, மின்சக்தி மற்றும் வலு அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் செயற்திட்டத்தின் பகுதிகள் 1-6 மற்றும் 9-10 இற்கான அமுலாக்கல் முகவராக இலங்கை மின்சார சபை இருக்கும் அதேநேரம் பகுதிகள் 7 மற்றும் 8 இற்கான அமுலாக்கமுகவராக நிலைபேறு சக்தி அதிகாரசபை இருக்கும். (i) கிழக்கு, வடமத்திய, தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள வலுப்படுத்தப்பட்ட மின்மாற்றி முறைமை, (ii) கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் விரிவுபடுத்தப்பட்ட கிராமிய மின்னிணைப்பு மற்றும் (iii) உயர்த்தப்பட்ட வினைத்திறனான வலு மற்றும் மேலும் புதுப்பிக்கக் கூடிய வலு அபிவிருத்தி என்பவற்றின் ஊடாக வழங்குகின்ற சேவைகளில் நம்பகமான, போதிய மற்றும் மலிவான மினசக்தி வழங்கல் மேவுகை மற்றும் வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையை முன்னேற்றுதல் என்பனவே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது.

2010 ஒக்தோபர் 6 ஆந் திகதிய செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 18,135 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 162.03 மில்லியனானதுடன் அதில் ரூபா 17,931.20 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 160.10 மில்லியன் கீழே தரப்பட்ட விபரங்களின் படி ஆசிய அபிவிருத்தி வங்கியால் இலங்கை மின்சார சபைக்கு நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2011 நவம்பர் 17 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 ஏப்ரல் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

| மூலம் | பகுதி இல | ஐ.அ.டொலர் (மில்லியன்) | ஐ.அ.டொலர் (மில்லியன்) | இல. ரூபா (மில்லியன்) | இல. ரூபா (மில்லியன்) |
|---|---|---|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி வங்கி | | | | | |
| சாதாரண மூலதன வளங்கள் (ஓசீஆர்) கடன் - இ.மி.ச | 1, 2, 4, 6, 9 மற்றும் 10 | 102.70 | | 11,502.40 | |
| வங்கி | | | | | |
| ஆசிய அபிவிருத்தி நிதியம் (ஏடிஎவ்) கடன் - இ.மி.ச * | 3 மற்றும் 5 | 9.72 | | 1,088.64 | |
| இமி.ச மற்றும் நி.ச. அதிகாரசபை இரண்டுக்குமான வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் | | 5.65 | | 632.80 | |
| உபமொத்தம் | | ------------- | 118.07 | ------------- | 13,223.84 |
| இலங்கை அரசாங்கம் (ஜீஓஎஸ்எல்) | | | 42.03 | | 4,707.36 |
| | | | 160.10 | | 17,931.20 |
| | | | ======= | | ======= |

* இத்தொகை இலங்கை மின்சார சபை மானியமாக பெற்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்களானது இலங்கை கணக்கீட்டுத் நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இவ்வறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் எழும் சீராக்கங்களின் விளைவுகளைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதி அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 3,168,132,328 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 3,899,145,738 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை கீழே தரப்பட்டுள்ளன.

| நடவடிக்கைகள் | | 2013 ஆம் ஆண்டிற்கான செலவினம் | 2013 ஆம் ஆண்டிற்கான செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| **மின்பரிமாற்ற முறைமை வலுப்படுத்தல்** | | | | |
| பகுதி 1 | புதிய காலி மின்வலு பரிமாற்ற அபிவிருத்தி | 374,757,989 | 44,606,801 | 497,699,883 |
| பகுதி 2 | வடக்கு கிழக்கு மின்சக்தி பரிமாற்ற அபிவிருத்தி | 2,397,494,369 | 309,809,537 | 2,788,946,512 |
| **கிராமிய மின்னிணைப்பு மற்றும் வழங்கலின் முன்னேற்றம்** | | | | |
| பகுதி 3 | அம்பாறை மாவட்ட விநியோகங்களின் அபிவிருத்தி | | | |
| பகுதி 4 | அம்பாறை மாவட்ட விநியோகங்கள் வலையமைப்பு நம்பகத்தன்மை அபிவிருத்தி | 48,046,305 | 207,765,069 | 255,811,374 |
| பகுதி 6 | ஊவா மாகாணத்தில் விநியோக முறைமையின் வலுப்படுத்தல் | | | |
| **வினைத்திறனான வலு மற்றும் புதுப்பிக்கக் கூடிய வலு** | | | | |
| பகுதி 10 | மொனறாகலை நீர் மின் நிலையம் | 347,833,665 | 8,854,304 | 356,687,969 |
| | | **3,168,132,328** | **571,035,711** | **3,899,145,738** |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் விரைவில் கிடைக்கக்கூடியவாறு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் ஆனால் தொடர்புபட்ட நிதியாண்டின் பின்னர் ஆறு மாதங்கள் கடந்திருந்தும் எவ்வித நிகழ்வும் இடம்பெறவில்லை. மேற்குறிப்பிட்ட கால இலக்கை அடைவதற்கு செயற்திட்டத்தால் முடிந்த பொருத்தமான கால இலக்கிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு செயற்திட்டம் பொறுப்பாக உள்ளது. எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2014 மே 20 இலேயே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 26,456,140 தொகையான செலுத்த வேண்டியவைகள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. ஆகவே, நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைபெறும் வேலை, தொழிலாரம்பிப்பு முற்பணம் மற்றும்

அட்டுறு செலவீனம் முறையே ரூபா 3,238,365 ரூபா 23,217,775 மற்றும் ரூபா 26,456,140 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு, செயற்திட்டத்தின் பகுதிகள் 1-6 மற்றும் 9- 10 என்பன இலங்கை மின்சார சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்த அதேநேரம், பகுதிகள் 7 மற்றும் 8 என்பன அமுலாக்கல் நிலைபேறு சக்தி அதிகாரசபையிற்கு உள்ளது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் ஒட்டுமொத்தப் பொறுப்பு இனங்காண முடியாதிருந்தது, ஏனென்றால், மின்சக்தி மற்றும் வலு அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சு என்ற பெயருடைய இரண்டு புறம்பான அமைச்சர்களின் கண்காணிப்பின் கீழ் இரண்டு கூறுகளாக வருகின்றமையாகும்.

(ஈ) மேலும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் இலங்கை மின்சார சபையால் கையாளப்பட்ட சகல வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட பொறுப்பாக இருந்த இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளரின் (செயற்திட்டங்கள்) கீழ் வந்திருக்கவில்லை. அத்தகையவாறு, இலங்கை மின்சார சபைக்கு ஒதுக்கப்பட்ட எட்டுப் பகுதிகளின் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்தக் கண்காணிப்பு முறைப்படி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

### 6.1 நிதிசார் முன்னேற்றம்

செயற்திட்ட நிர்வாக கைநூலின் படி, வெளிநாட்டு நிதிகள், இலங்கை அரசாங்கத்தின் / இலங்கை மின்சார சபையின் நிதிகள் என்பவற்றின் நிதிகளை உள்ளடக்கிய மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 17,931 மில்லியன் தொகையானதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 5,303 மில்லியனாகும். 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டிய செலவினத்துடன் ஒட்பிடப்பட்டவாறு திரண்ட செலவினம் கீழே தரப்படுகின்றன.

| நிதிகளின் மூலம் | கடன் உடன்படிக்கையின் கீழ் உடன்பட்ட தொகை | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்பட்ட செலவினம் | | நிதிகளின் பயன்பாடு |
|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் | சதவீதம் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 118.7 | 13,224 | 36.41 | 4,078 | 31 |
| இலங்கை அரசாங்கம் / இலங்கை மின்சார சபை | 42.03 | 4,707 | 10.93 | 1,225 | 26 |
| மொத்தம் | 160.10 | 17,931 | 47.34 | 5,303 | 30 |

### 6.2 பௌதீக முன்னேற்றம்

கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் கீழே தரப்படுகின்றன.

| | நடவடிக்கை | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முன்னேற்றம் | |
|---|---|---|---|
| | **பரிமாற்ற முறைமையை வலுப்படுத்தல்** | **இலக்கு** | **எய்தல்** |
| | | **சதவீதம்** | |
| **1** | **புதிய காலி மின்வலு பரிமாற்ற அபிவிருத்தி** | | |
| | தொகுதி ஏ: காலியில் 3*31.5 எம்வீஏ, 132/33 கேவீ கட்ட உபநிலைய நிர்மாணம் | 55 | 36 |
| | தொகுதி பீ: அம்பலாங்கொடை கட்ட உப நிலையத்திலிருந்து காலியில் மின்வலைச் சட்ட உபநிலையம் வரை 40 கிலோமிற்றர் 132 கேவீ -மின்மாற்ற நிர்மாணம் | 66 | 47 |
| **2** | **வடக்கு கிழக்கு மின்வலு பரிமாற்ற அபிவிருத்தி** | | |
| | தொகுதி ஏ: உப நிலையம்- பொலநறுவை, வவுனதீவு, மொனறாகலை என்பவற்றில் 132 கேவீ /33 கேவீ மின்வலைச் சட்ட உப நிலைய நிர்மாணம் மற்றும் அம்பாறை மின்வலைச் சட்ட உப நிலையத்தில் இரண்டு 132 கேவீ வரிசை வழி நிர்மாணம் | 50 | 47 |
| | தொகுதி பீ: மஹியங்கனை மின்வலைச் சட்ட உப நிலைய முதல் அம்பாறை மின்வலைச் சட்ட உப நிலைய வரியாக இரண்டு 132 கேவீ இரட்டை சுற்று பரிமாற்ற நிலையங்களின் பரிமாற்ற வரிகைளின் நிர்மாணம்<br>ஹபறனை – வாழைச்சேனை கட்ட உப நிலையம் – 132 கேவீ பரிமாற்ற வரிசை முதல் பொலநறுவை ஜீஎஸ்எஸ், மெடிகம - மொனறாகலை பரிமாற்ற வரிசை | 75 | 70 |
| | தொகுதி சீ கொத்மலை புதிய அநுராதபுரம் 220 கேவீ பரிமாற்ற வரிசையின் இரண்டாவது சுற்றின் வரிசையிடல் | 84 | 91 |
| | **கிராமிய மின்வழுங்கல் மற்றும் விநியோக முறைமை முன்னேற்றம்** | | |
| **3** | **அம்பாறை விநியோக அபிவிருத்தி** | | |
| | நடுத்தர வோல்ரேச் மற்றும் குறைந்ததர வோல்ரேச் விநியோக வரிசைகள் மற்றும் ஏறத்தாழ 486 கிராமிய மின்வழங்கல் திட்டங்களின் கீழ் விநியோக உப நிலையங்கள் என்பவற்றின் நிர்மாணம் | 100 | 80 |
| **4** | **அம்பாறை மாவட்ட விநியோக வலையமைப்பு நம்பகத்தன்மை** | | |
| | தானியங்கி- மூடுதல்கள் மற்றும் சுமை முறியடிப்பு தடைகள் என்பவற்றின் பெருத்தல் முன்னேற்றம் | 100 | 74 |
| **5** | **கிழக்கு மாகாண விநியோக இயலளவு அபிவிருத்தி** | | |
| | அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் வரிசை குழுக்களிற்கான நிர்மாணம் மற்றும் பாரமரிப்புக்கான கருவிகளின் கொள்வனவு மற்றும் விசேட | 95 | 0 |

| | | | |
|---|---|---|---|
| | பயன்பாட்டு வாகனங்கள் | | |
| **6** | **ஊவா மாகாணத்தில் விநியோக முறைமையின் வலுப்படுத்தல்** | | |
| | மேலதிக 33 கேவீ ஆரம்ப விநியோக முக்கிய பகுதி வரிசைகளின் நிர்மாணம் (ஏறத்தாழ 33 கிலோமீற்றர் இரட்டைச் சுற்று மற்றும் 12 கிலோமீற்றர் தனிச் சுற்று) மற்றும் இருக்கின்ற 33 கேவீ வரிசையின் ஏறத்தாழ 9 கிலோமீற்றர் தரமுயர்த்தல் உள்ளடங்கலாக ஊவா மாகாணத்தில் கல்டிமுல்ல மற்றும் றாகல பகுதியில் நடுத்தர வோல்ரேச் மற்றும் குறைந்ததர வோல்ரேச் இற்கான வலுப்படுத்தல் | 98 | 94 |
| | **வினைத்திறனான சக்தி மற்றும் புதுப்பிக்கக்கூடிய சக்தி** | | |
| **9** | **மின்சக்தி முகாமைத்துவ மீள்செயற்பாடு** | | |
| | அனியங்கன்ட, அம்பலாங்கொடை மற்றும் கட்டுநாயக்க மின்வலைச் சட்ட உபநிலையத்தில் நட்டக் குறைப்பிற்காக 40 எம்வீ ஏஆர் சிறுகல மின்விசை இயலளவாளர் வங்கிகளை பொருத்துதல் | 100 | 2 |
| **10** | **மொனறாகலை நீர் மின் நிலையம்** | | |
| | ஏறத்தாழ 30 எம்வீ ஆற்று நீர் மின் நிலையத்தின் விரிவான பொறியியல் வடிவமைப்பு தயாரித்தல் | 90 | 85 |

**7.** **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) இருப்புக்கள்
(இ) கண்காணிப்பு மற்றும் செயலாற்றல் மீளாய்வு